**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 27.09.2018–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 24.09.2018 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் தட்டில் முறுக்கு விற்பனை ஏலத்திற்கான டேவணித் தொகை திரு கே. நடேசன் அவர்கள் `. 10000/– செலுத்தியுள்ளார். மேற்படித் தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படி அன்னாரால் கோரப்பட்டத் தொகை 2011–12–ஆம் ஆண்டு பதிவேட்டில் உள்ளதால் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(டி3/455/18)

**தீர்மானம் எண். 414**

அனுமதிக்கப்பட்டது

(2) இந்நகராட்சி வருவாய் நிதியின்கீழ் நடைபெற்ற பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்ட திரு கே. பன்னீர்செல்வம், ஒப்பந்ததாரர் தான் செலுத்திய ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகளை திரும்ப வழங்கும்படி கோரியுள்ளார்.

எனவே, மேற்படித் தொகை `. 84374/–ம் 2003–ஆம் ஆண்டு முதல் 2011–ஆம் ஆண்டு வரையுள்ள பதிவேட்டில் உள்ளதால் அன்னாருக்கு தொகையை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(டி3/1382/18)

**தீர்மானம் எண். 415**

அனுமதிக்கப்பட்டது

(3) இந்நகராட்சிக்குட்பட்ட 26–ஆவது வார்டு காட்டூர் காட்டுக்கொட்டாய் செங்குந்தர் திருமண மண்டபம் செல்லும் வழியில் தெரு விளக்குகள் இல்லாத காரணத்தால் போக்குவரத்து மிகவும் இடையூறாகவும், இரவு நேரங்களில் அச்சமாகவும் உள்ளதால் மேற்படி பகுதிகளுக்கு புதியதாக 7 எண்ணிக்கை தெரு விளக்குகள் அமைக்க ஏற்படும் உத்தேச செலவினம் `. 65000/–க்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1164/18)

**தீர்மானம் எண். 416**

அனுமதிக்கப்பட்டது

(4) இராசிபுரம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டப் பணிகளுக்காக நான்கு மின்கல இயங்கு வாகனம் (Battery operated vehicle) விநியோகம் செய்யும் `. 720000/– மதிப்பீட்டுப் பணிக்கு 11.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Encorn Engineers, Coimbatore - `. 180500/- each
2) Priyam Industries & Engineering Private Limited, Chennai – `. 179900/- each

குறைவான ஒப்பந்தப்புள்ளியினை Priyam Industries & Engineering Private Limited, Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான Priyam Industries & Engineering Private Limited ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/1899/18)

**தீர்மானம் எண். 417**

அனுமதிக்கப்பட்டது

(5) இராசிபுரம் நகராட்சி குடிநீர் லாரி எண். ட்டி என் 28 பி இசட் 8975 வாகனத்தின் மின்கலம் பழுதடைந்ததை தொடர்ந்து, அதற்கு பதிலாக புதிய மின்கலம் (AH 1000) வாங்க வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) R.K. Systems, 133A-1, Annasalai, Rasipuram - `. 8000/-
2) Sree Ram Agencies, 39, SP. Puthur, Namakkal - `. 8400/-
3) Power on Solutions, Opp. New Bus Stand, Rasipuram `. 8200/-

குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள R.K. Systems நிறுவனத்தின் மூலம் மின்கலம் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று மின்கலம் வாங்கிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2152/18)

**தீர்மானம் எண். 418**

அனுமதிக்கப்பட்டது

(6) இராசிபுரம் நகராட்சி (புதிய பஸ் நிலையம்) மாதா கோவில் அருகில் LED உயர் கோபுர மின் விளக்கு அமைக்க பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018–19–இன் கீழ் `. 850000/– மதிப்பீட்டுப் பணிக்கு 12.09.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) சன் சோலார் & எலக்ட்ரிகல்ஸ், 26/4, திரு வி.க.தெரு, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.01%

குறைவு.

2) நிரஞ்சனா கான்ட்ராக்ட் & டிரேடர்ஸ், 8/154, காக்காவேரி அஞ்சல் – மதிப்பீட்டைவிட 6.78% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான சன் சோலார் & எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.01 % குறைவான சன் சோலார் & எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/529/18)

**தீர்மானம் எண். 419**

அனுமதிக்கப்பட்டது

(7) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பொது மக்கள் பயன்பாட்டிலுள்ள 89 ஆழ்துளைக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள கைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய தேவையான தளவாடப் பொருட்கள் வாங்க உத்தேசமாக `. 242000/– ஆகும். நாமக்கல், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது ஆணை எண். 552/2018/ஊநி2 நாள் 07.05.2018–இல் 2018–19–ஆம் ஆண்டிற்கு குடிநீர் உபகரணங்கள் கொள்முதல் செய்ய விலை நிர்ணயம் மற்றும் ஈரோடு Flowin Industries நிறுவனத்தினையும் தேர்வு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சிக்குத் தேவையான கைப்பம்பு உதிரிபாகங்களை ஈரோடு Flowin Industries நிறுவனத்தில் வாங்கிக் கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) பொது மக்களின் தண்ணீர் தேவையினைக் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது ஆணையில் தேர்வு செய்த M/s. Flowin Industries, ஈரோடு நிறுவனத்தில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/2169/18)

**தீர்மானம் எண். 420**

அனுமதிக்கப்பட்டது

(8) இராசிபுரம் நகராட்சி தட்டான்குட்டை ரோடிலுள்ள தள உர தயாரிப்பு மைய (on site compost tube) முகப்புப் பகுதியில் இரும்பு கிரில் கதவு அமைக்கவும், பழுதடைந்துள்ள சுற்றுச்சுவர் மற்றும் கால்வாய்களை சீரமைக்கவும், தயாரிக்கப்பட்ட மதிப்பீடு `. 160000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம். (இ1/2247/18)

**தீர்மானம் எண். 421**

அனுமதிக்கப்பட்டது

(9) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் வீட்டு கழிவுநீரினை பாதாள சாக்கடையில் இணைத்தல் பணிகள் மேற்க்கொள்ள மூன்றாம் அழைப்பு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 31.08.2018 அன்று கீழ்க்கண்ட நாளேடுகளில் வெளியிடப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1) Business standard (all edition) | - | `. 11250/- |
| 2) மக்கள் குரல் (தமிழ்நாடு) | - | `. 33750/- |
| | | `. 45000/- |
| மாநில / மத்திய அரசு சரக்கு (ம) சேவை வரி | – | `. 2250/- |
| **மொத்தம்** | – | **`. 47250/-** |

`. 47250/- ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/804/18)

**தீர்மானம் எண். 422**

அனுமதிக்கப்பட்டது

(10) இராசிபுரம் நகராட்சியில் தூய்மை பாரத திட்டத்தின்கீழ் தட்டான்குட்டை உரக்கிடங்கில் குவித்து வைக்கப்பட்டுள்ள 41000 க.மீ. குப்பைகளை (Bio mining) அகற்றுதல் பணிக்கு மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரி கீழ்க்காணும் நாளேடுகளில் விளம்பரம் வெளியிடப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1) தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் | - | `. 48750/- |
| 2) மாலை முரசு | - | `. 20000/- |
| மாநில / மத்திய அரசு சரக்கு (ம) சேவை வரி | – | `. 3438/- |
| **மொத்தம்** | – | **`. 72188/-** |

`. 72188/- ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/1899/18)

**தீர்மானம் எண். 423**

அனுமதிக்கப்பட்டது

(11) இந்நகராட்சி குடிநீர் நிதியின்கீழ் பல்வேறு பணிகளுக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்கள் கலந்து கொண்டு, செலுத்தப்பட்ட வைப்புத் தொகை மற்றும் பணிகள் முடிக்கப்பட்டு பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே, அன்னார் கோரியுள்ள தொகை `. 71177/– 2009–ஆம் ஆண்டு முதல் உள்ளதால் மேற்படித் தொகையினை திரு என். செல்லப்பன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(டி3/1541/18)

**தீர்மானம் எண். 424**

அனுமதிக்கப்பட்டது

( 12 ) இராசிபுரம் நகராட்சியில் உள்ள ஐந்து மேல்நிலைத் தொட்டிகளை சுத்தம் செய்து பராமரிக்க 1 மெ. டன் பிளீச்சிங் பவுடர் வாங்க `. 24000/–க்கு நகர்மன்ற தீர்மானம் எண். 335 நாள் 21.06.2018 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடியில் 1 மெ. டன் பிளீச்சிங் பவுடர் விலை `. 30000/– என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, கூடுதல் செலவினம் `. 6000/– மேற்க்கொள்ள மன்ற அனுமதியும் செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(இ2/1306/18)

**தீர்மானம் எண். 425**

அனுமதிக்கப்பட்டது

( 13 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு வருகின்ற மாரியம்மன் திருவிழா, தீபாவளி பண்டிகை மற்றும் பன்றி காய்ச்சல், டெங்கு காய்ச்சல் தடுப்பதற்கு நகரில் முக்கிய பகுதியில் பிளீச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்புத் தூள் மற்றும் பினாயில் கொண்டு நகரை தூய்மையாக வைத்துக் கொள்ள கீழ்க்காணும் பொருட்கள் வாங்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1) | நீர்த்த சுண்ணாம்புத்தூள் | – | 15 டன் |
| 2) | பிளீச்சிங் பவுடர் | – | 3 டன் |
| 3) | பினாயில் | – | 200 லிட்டர் |

மேற்படி பொருள்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை `. 3,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அவசர அத்தியாவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

(எச்1/2518/18)

**தீர்மானம் எண். 426**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– ரா. மகேஸ்வரி,
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.